பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 20 வியாழக்கிழமை 08.12.2022 கதிர் 285

## கூட்டணியில் இருந்து எம்.பி. ஒருவர் 'பல்டி'யா?

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவர், இன்று கட்சி தாவவுள்ளார் என வெளியாகும் தகவலைக் கூட்டணியின் உள்ளக வட்டாரங்கள் மறுத்தன.

2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு இன்று மாலை நடைபெறவுள்ளது.

இதன்போது பாதீட்டுக்கு 8

# நாட்டின் பல பகுதிகளை உலுப்பும் 'மாண்டஸ்' சூறாவளியின் தாக்கம்

- 100 மி.மீ. இற்கு அதிக பலத்த மழை
- வடக்கு, வடமத்தி, கிழக்கில் மணிக்கு 60 - 70 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று
- கடற்றொழிலில் ஈடுபட வேண்டாம் என்று அறிவிப்பு

'மாண்டஸ்' (Mandous) சூறாவளியின் தாக்கம் காரணமாக இன்று வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா, மத்திய, வடமேற்கு மாகாணங்களின் சில இடங்களில் 100 மி.மீ. இற்கும் அதிக பலத்த மழை பெய்யும் சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. 2

## வளி மாசடைதல் திடீர் அதிகரிப்பு

இலங்கையின் பல நகரங்களில் வளி மாசடைதல் திடீரென அதிகரித்துள்ளது.

அதற்கமைய, நாட்டின் பல பிரதேசங்களில் வளி மாசுபாட்டு தரக்குறியீடு 150 முதல் 200 புள்ளிகளாகக் காணப்படுகின்றன என்று தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

நாட்டைச் சூழவுள்ள வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தாழமுக்க நிலையும் இதற்குக் காரணம் என்று தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் வளி மாசுபாடு முகாமைத்துவ பிரிவின் தலைமை 2

## வடக்கு, கிழக்கில் சனியன்று உறவுகள் பெரும் போராட்டம்



நாளைமறுதினம் (டிசம்பர் 10 ஆம் திகதி) சனிக்கிழமை சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தினரால் தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கு தழுவிய ரீதியில் வடக்கு மாகாணத்தில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களும் சேர்ந்து வவுனியாவிலும், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மூன்று 8

## 'பட்ஜட்'டுக்கு எதிராக வாக்களிக்க ஐந்து சிங்களக் கட்சிகள் தீர்மானம்

வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்கப்படும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று மாலை நடைபெறவுள்ளது.

இதன்போது அதற்கு ஆதரவாக வாக்களிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட அரச ஆதரவு கட்சிகள் தீர்மானித்துள்ளன.

எனினும், பாதீட்டுக்கு எதிராக வாக்களிக்கப்படும் 2

## அமைச்சுப் பதவிக்காக காத்திருக்கும் துமிந்த



அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்க நான் தயாராகவுள்ளேன். எப்போது அந்தப் பதவி கிடைக்கும் என்று தெரியவில்லை.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயலாளரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான துமிந்த 2

## அமெரிக்கா செல்ல அவதிப்படும் கோட்டா



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தனது அமெரிக்கப் பிரஜாவுரிமையை இரத்துச் செய்ததால் கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்காவுக்குச் செல்ல முடியாமல் இப்போது அவதிப்படுகின்றார்.

ஏதாவது ஒரு வழியில் அமெரிக்கா சென்று விட வேண்டும் என்ற முடிவில் இருக்கும் கோட்டாபய அதற்கான முயற்சியில் இறங்கியுள்ளார்.

ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதியாக அல்லது அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராகச் செல்வதற்கு விருப்பம் கொண்டு 2

## அடுத்த வருடம் ஆகஸ்ட் ஜனாதிபதித் தேர்தலாம்

ஐ.தே.க. கூறுகின்றது





நாட்டு மக்கள் தேர்தலைக் கோருகின்றனர். அதனால் 2023 ஆகஸ்ட் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படலாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. 8

## போதைப்பொருள் பாவனைக்கு எதிராக யாழ். பல்கலையில் நாளை கருத்தரங்கு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் நன்னடத்தை மற்றும் நல்வாழ்வு மையமும், தனிநபர் தொழில்முறை விருத்திக்கான துறையும் இணைந்து நடத்தும் 'போதைப்பொருள் பாவனை – அதன் பல்வகைக் கண்ணோட்டமும் பிரதிபலிப்புகளும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட கூவர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் 8

## மினி சூறாவளியால் 26 பாடசாலைகளுக்கு தற்காலிக விடுமுறை

பதுளையில் நேற்று ஏற்பட்ட மினி சூறாவளி காரணமாகப் பல பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் எதிரொலியாக பதுளை மாவட்டத்தின் 26 பாடசாலைகளுக்குத் தற்காலிக விடுமுறை 2

## ஐந்து கைத்தொலைபேசிகள் பூஸா சிறையிலிருந்து மீட்பு!

காலி – பூஸா சிறைச்சாலையின் விசேட பிரிவுக்கு உள்நுழையும் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த ஐந்து கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் சிம் அட்டைகள், மின்னேற்றி என்பனவும் மீட்கப்பட்டன என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. சிறைச்சாலை வளாகத்தில் உள்ள, வடிகான்களைச் சீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோதே குறித்த பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

அவற்றை, மேலதிக விசாரணைகளுக்காக சிறைச்சாலைகள் தலைமையகத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## கோட்டாவின் வழியில் சென்று நாட்டை நட்டாற்றில் விடாதீர்கள்

ரணிலை எச்சரிக்கும் சஜித் அணி

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோட்டாபய ராஜபக்ஷவின் வழியில் சென்றால் சர்வதேச நாடுகளின் உதவிகள் எமக்குக் கிடைக்காது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்குப் பிரச்சினை ஏற்படும் போது ஜனநாயக ரீதியாகப் போராடுவது 2

## நாட்டின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளில் (திருகோணமலைக்கு கிழக்காக 360 கிலோ மீற்றர் தூரத்தில்) நிலைகொண்டுள்ள ஆழ்ந்த தாழமுக்கமானது 'மாண்டஸ்' என்ற ஒரு சூறாவளியாக வலுவடைந்து தற்போது வட அகலாங்கு 9.4 ஹி இற்கும் கிழக்கு நெட்டாங்கு 84.1 சி இற்கும் அருகில் மையம் கொண்டுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அது மேற்கு- வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை இரவுப் பொழுதில் தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்பில் வட தமிழ்நாடு, பாண்டிச்சேரி, தென் ஆந்திரப் பிரதேச கரையோரப் பிரதேசங்களை அடையக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மேக மூட்டமான வானம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு மாகாணத்திலும், திருகோணமலை மாவட்டத்திலும் சில இடங்களில் சில இடங்களில் 100 மி.மீ. இற்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. வடக்கு, வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 - 70 கிலோ மீற்றர் வரை வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல் மாகாணத்திலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மன்னாரிலிருந்து காங்கேசந்துறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளிலும் தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளிலும் கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் மறு அறிவித்தல் வரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள். காங்கேசன்துறையிலிருந்து திரு கோணமலை, மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கரையோரத் துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் கடல் அலைகள் 2.5 - 3.5 மீற்றர் உயரம் வரை மேலெழும்பக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் எதிர்கால ஆலோசனைகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

05 ஹி -15 ஹி மற்றும் 80 சி - 88 சி கடல் பகுதிகளில் காற்றின் உச்சபட்ச வேகம் மணிக்கு (70 -90) கி.மீ. ஆகவும் அது மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் அதிகரிக்கவும் வாய்ப்பு காணப்படுகின்றது.

மேற்கூறிய கடற்பரப்புகளில் பலத்த மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்பதோட, கடல் மிகக் கொந்தளிப்பாகவும் கடல் அலை உயர்வடையவும் வாய்ப்பு காணப்படுகின்றது.

## வளி மாசடைதல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்வாளர் சரத் பிரேமசிறி குறிப்பிட்டுள்ளார். வளி மாசடைதல், சுவாச நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மேலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

வீடுகளிலிருந்து வெளயே செல்லும் சந்தர்ப்பங்களில் முகக்கவசத்தை அணிவதன் மூலம் நச்சு வாயு பாதிப்பை தவிர்த்துக்கொள்ள முடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## பட்ஜட் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய மக்கள் சக்தி, உத்தர லங்கா சபாகய, சுதந்திர மக்கள் பேரவை என்பன அறிவித்துள்ளன.

## அமைச்சுப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திஸாநாயக்க தெரிவித்தார். 'எப்போது அமைச்சராகப் போகின்றீர்கள்?' என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வேலையைப் பாரம் கொடுத்தால் இதைச் சரியாகச் செய்வார் என்று ஜனாதிபதி நினைத்து என்னிடம் பொறுப்பை ஒப்படைத்தால் அதை நான் ஏற்றுக்கொள்வேன். அதற்காகத் தருகின்ற அமைச்சைப் பாரமேற்கமாட்டேன். என்னால் செய்ய முடியும் என்று நான் உணருகின்ற அமைச்சை மட்டுமே பாரமேற்பேன் - என்றார்.

## அமெரிக்கா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால், ஜனாதிபதியிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை.

இந்தநிலையில் சுற்றுலா விசா- விலாவது அமெரிக்கா செல்வதென்று முடிவெடுத்து அதற்குக் கோட்டாபய விண்ணப்பித்துள்ளார். அதுவும் இப்போது தாமதமாகின்றது.

இதனால் கவலையில் இருக்கும் கோட்டாபயவை அமெரிக்காவில் இருக்கும் அவரது பிள்ளைகள் ஆறுதல் படுத்தி வருகின்றனர்.

விசா கிடைக்கும் வரை அவர்கள் இலங்கை வந்து கோட்டாபயவுடன் சில நாட்கள் இருப்பதற்கு முடிவெடுத்துள்ளனர் என்று அறியமுடிகின்றது.

## கோட்டாவின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் உரிமை. அதைத் தடுக்க முடியாது.

அவ்வாறு போராட்டம் நடத்தினால் இராணுவத்தைக் கொண்டு தடுப்பேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுவதை ஏற்க முடியாது. இது ஜனநாயக மீறல் - மனித உரிமை மீறல். இதைத்தான் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் செய்தார்.

கோட்டாவின் வழியில் ரணிலும் சென்றால் நாடு அவ்வளவுதான். நாடு பொருளாதார ரீதியில் மீண்டும் பின்தள்ளப்படும்.

நாடு இப்போது இருக்கின்ற நிலையில் இந்த மாதிரியான ஹிட்லரின் செயற்பாடுகள் சரி வராது. இதன் மூலம் பிரச்சினைகள் தீராது.

பிரச்சினைகளை விரைவாகத் தீர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைத்தான் செய்ய வேண்டும். அது தான் ஒரு நாட்டுத் தலைவருக்கு அழகு. ஜனாதிபதி பொருளாதாரப் பிரச்சி னைகளைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்தால் எதற்காக மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடப் போகின்றார்கள்?

பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்வதேச நாடுகளின் உதவிகள் அவசியம். ஆனால், மக்களை அடக்கும் ஜனநாயக விரோத அறிவிப்புக்களை வெளியிட்டால் அந்த நாடுகளின் உதவி கிடைக்காது.

கோட்டாவின் வழியில் செல்ல வேண்டாம். சென்றால் அவ்வளவுதான் என்று ரணிலிடம் மீண்டும் மீண்டும் சொல்லி வைக்க விரும்புகின்றோம் - என்றார்.

## மினி சூறாவளி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது. பதுளை மாவட்டத்தில் லுணுகலை, பசறை, நமுனுகுலை, எல்ல ஆகிய பகுதிகளில் நேற்றிரவு முதல் பலத்த காற்று வீசுவதால் அந்தப் பகுதிகளில் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்திய நிலைப்பாடு என்ன?

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரணியம் ஜெய்சங்கர் நேற்று இந்திய ராஜ்ய சபையில் வைகோவின் கேள்விகளுக்கு அளித்த சுருக்கமான பதிலின் சாராம்சம் ஈழத் தமிழர் தரப்பில் தவறான புரிதல்களினால் சில சலசலப்புகளை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிகின்றது

இந்த விடயத்தில் ஈழத் தமிழர் தரப்பு சரியான புரிதல் இல்லாமல் குழம்புகின்றது என்றால், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரும் கூட சில விடயங்களை வேண்டுமென்று தவிர்த்துப் பேசியிருக்கின்றார் என்பதும் கவனிக்கத்தக்கது.

"ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் [இலங்கை தொடர்பான பிரேரணையில்] நாம் வாக்களிக்காமல் விட்டமை இந்தியாவின் நீண்ட கால நிலைப்பாடு. எங்களது அரசு மாத்திரமல்ல, இதற்கு முந்திய அரசுகளும் கூட இத்தகைய அணுகுமுறையையே கடைப்பிடித்தன. இலங்கையில் தமிழ் சமூகத்தின் நெருக்கடிகளை உரிய முறையில் அணுகித் தீர்ப்பதற்கும் அவர்களை மேம்பாடடையச் செய்வதற்கும் இதுவே ஆக்கபூர்வமான வழிமுறை என்று அவை [இந்திய அரசுகள்] கருதிச் செயற்பட்டன. அதையே தொடர்ந்தும் எங்கள் அணுகுமுறையாக முன்னெடுக்கின்றோம்."

– என்று கூறியிருக்கின்றார் ஜெய்சங்கர். இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று – இதற்கு முந்திய அரசுகள் என்று சொல்வதற்கு இல்லை. 2009 யுத்தம் முடிந்த பின்னர் ஒரே ஒரு காங்கிரஸ் அரசுதான். அதற்குப் பின்னர் 8 ஆண்டுகளாக இருப்பது மோடியின் அரசே.

அடுத்தது – முன்னர் இருந்த காங்கிரஸ் அரசு இப்போதைய பா.ஜ.க. அரசு போல வாக்களிக்காமல் மதில் மேல் பூனையான கொள்கையை எப்போதும் பின்பற்றவில்லை.

2009 இல் யுத்தம் முடிந்ததும், செப்ரெம்பரில் கொழும்பு அரசுக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டு வரப்பட்ட பிரேரணையை, கொழும்புக்கு ஆதாரவான தீர்மானமாகத் தானே முன்னின்று மாற்றச் செய்து, தானும் சேர்ந்து நிறைவேற்றி வைத்தது இந்தியா. அதேபோல 2012 இல் இலங்கைக்கு எதிராக வந்த பிரேரணையை ஆதரித்துத் தானும் சேர்ந்து நிறைவேற்றியது இந்தியா. இவற்றையெல்லாம் அமைச்சர் ஜெய்சங்கர் மறந்து விட்டாரோ என்னவோ...?

அடுத்து – முழுமையான இலங்கைக்கே இந்தியாவின் ஆதரவு, உதவி என்பது இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவும் விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு பற்றியது. அதில் தமிழர் தரப்பு குழம்புவதற்கு இடமில்லை. தமிழ் தலைவர்களான சுமந்திரனும் மனோகணேசனும் ஏனையோரும் கூட, அதைத்தான் வலியுறுத்தி நின்றனர். இந்திய நிலைப்பாடு இவ்விடயத்தில் சரியானதும் பொருத்தப்பாடானதும்தான்.

இனப்பிரச்சினை விடயத்தில் கூட, முழுமையான இலங்கைக்குள் தீர்வு என்பதே எண்பதுகளில் இருந்து இந்தியாவின் நிலைப்பாடு. அது புதிய விடயம் அல்ல. ஆனாலும் தமிழர் சமூகத்தின் மேம்பாடு, பாதுகாப்பு, கௌரவமான வாழ்வு ஆகிய விடயங்களை இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றது. ஜெய்சங்கரின் நேற்றைய அறிவிப்புக் கூட அதற்கு முரணானது அல்ல என்பது கவனிக்கப்பட வேண்டும்.

# சிவபெருமான் யாருடைய ஆள்? யாழில் படையினர் விசாரணை!

## கலாநிதி ஆறு.திருமுருகன் வேதனை



சிவபெருமானின் அடையாளமான சிவ லிங்கத்தை வைப்பதில் கூட இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக தெல் லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவரும் சிவபூமி அறக்கட்டளை தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

நேற்று (புதன்கிழமை) நாவற்குழியில் 7 அடி சிவலிங்க பிரதிஷ்டை நிகழ்வின்பின் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

கடந்த மாத இறுதிப் பகுதியில் நாவற்குழி பகுதியில் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்ய நிரந்தரமான கட்டடம் ஒன்று அமைக்க வேண்டும் என சிவபூமி அறக்கட்டளையினராகிய நாம் தீர்மானித்திருந்தோம்.

அதனடிப்படையில் அதற்குரிய பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போது பாதுகாப்பு தரப்பினர் வந்து பலதடவை விசாரணை மேற்கொண்டார்கள்.

நாங்கள் கூறினோம், இது ஒரு சைவ கோவில் இந்துகளின் தெய்வமாகிய சிவபெருமானின் அடையாளமாக சிவலிங்கம் தான் இங்கே வைக்கப் போகின்றோம் எனக் கூறினோம். அப்போது கேட்டார்கள் சிவபெருமான் என்றால் அவர் யாருடைய ஆள் என்று?

அவர்தான் எங்களுடைய பரம்பொருள் என்று கூறினோம். அதையும் இரண்டு பக்கங்களில் எழுதிச் சென்றார்கள். அவ்வாறு பல விசாரணைகளுக்கு நாங்கள் முகம் கொடுத்தோம். ஒரு சிவபெருமானின் அடையாளமான சிவலிங்கத்தை யாழ்ப்பாணத்தில் வைப்பதற்கு பல இடர்பாடுகளை எதிர் நோக்க வேண்டி இருக்கின்றது. குறிப்பாக விழ விழ எழும்புவோம் யாழ்ப்பாணத்தவர்கள் என்றால் அவ்வாறுதான் யுத்த காலத்தில் கூட எமது இந்து மதத்தைக் கட்டிக் காத்து வந்த நாம் தற்போது சிவன் சிலைகளை பல இடங்களில் வைப்பதன் மூலமே இந்து மதத்தின் அடையாளங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

குறிப்பாக இந்த பகுதியில் மூன்று ஏக்கர் காணியைக் கொள்வனவு செய்துள்ளோம். அதற்கு உதவிய அரச திணைக்கள அதிகாரிகளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அத்தோடு இந்த வீதியினல் பயணிக்கும் அடியவர்கள் சிவலிங்கத்தை வணங்கி யாழ்ப்பாண நகருக்குள் பிரவேசிப்பதற்கு ஏற்றவாறாக ஒரு புனிதத் தன்மையோடு இந்த இடத்தைப் பேணுவதற்காகவும் இந்த இடத்தில் ஒரு நிரந்தர கட்டடத்தை அமைத்து 7 அடி சிலையை அதாவது கருங்கல்லினாலான 7 அடி சிவலிங்கத்தை அமைத்து நித்தம் ஒரு பூஜை வழிபாடுகளும் இடம் பெறக்கூடியவாறு ஏற்பாடுகளை செய்திருக்கின்றோம். – என்றார்.

# ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கிளிநொச்சியில் வைத்துக் கைது!



கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் வீதி சோதனையின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உடைமையில் வைத்திருந்த 900 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் பதினையாயிரம் ரூபாய் பணமும் மீட்கப்பட்டதுடன், அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசி, ஐஸ் போதப்பொருள் பயன் படுத்தும்போது படமாக்கப்பட்ட படத்தட்டு ( சிடி) ஆகியனவும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபர் இன்று (வியாழக்கிழமை) கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி. எம். சதுரங்க தெரிவித்துள்ளார்.

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்றுநோயாளர்களுக்காக 5 லட்சம் ரூபா பெறுமதியான மருந்துகள் தனிநபரால் அன்பளிப்பு!

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோயாளர்கள் மருந்து வகைகள் இன்றி பெரும் துயரங்களைச் சந்திக்கின்றனர் என்று செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் முன்வைத்த கோரிக்கை எமது காலைக்கதிர் மாலைப்பதிப்பில் முதற்பக்க செய்தியாகப் பிரசுரித்திருந்தது..

அந்தப் பதிவை – அதன் உண்மைத்தன்மையை – அவசர தேவையை உணர்ந்த தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத நல்லுள்ளம் கொண்ட அப்பர் ஒருவர் புற்றுநோயாளர்களுக்கு என ஒரு மாதத்துக்குத் தேவையான 4 மருந்துவகைகளை முதற்கட்டமாக தனது சொந்த நிதியில் 5 லட்சத்து 8 ஆயிரம் ரூபாவுக்கு கொழும்பிலிருந்து இரு நாள்களில் கொள்வனவு செய்து அன்பளிப்பாக தெல்லிப்பழை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஊடாக வழங்கியிருந்தார். இந்த மருந்துகளை நேற்று (புதன்கிழமை) தெல்லிப்பழை நோயாளர் நலன்புரிச் சங்க உறுப்பினர் லயன் சி.ஹரிகரன், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் மருத்துவ உத்தியோகத்தர் வைத்தியர் ஜனனியிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர்;, தாதிய பரிபாலகர் ஆகியோர் உடன் கலந்துகொண்டனர்.

# அர்ஜென்டினா துணை அதிபருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை

பியூனஸ் அயர்ஸ், டிச.08

அர்ஜென்டினாவின் துணை அதிபராக கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் பதவி வகித்து வருகின்ற கிறிஸ்டினா பெர்னாண்டஸ், கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 2 முறை அந்த நாட்டின் அதிபராகவும் பதவி வகித்துள்ளார். அதிபராக இருந்தபோது தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தினார் எனவும், பொதுப்பணிக்கான ஒப்பந்தங்களை ஒதுக்கீடு செய்வதில் முறைகேடு செய்தார் எனவும் கிறிஸ்டினா மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பாக அவர் மீது ஊழல் வழக்கு தொடரப்பட்டு நீதிமன்றில் விசாரணை நடந்து வந்தது. தன் மீதான குற்றச்சாட்டுகளை கிறிஸ்டினா திட்டவட்டமாக மறுத்து வரும் நிலையில், நேற்று முன்தினம் இந்த வழக்கில் இறுதி விசாரணை நடைபெற்றது. இருதரப்பு வாதங்களை கேட்டறிந்த நீதிபதி கிறிஸ்டினாவை குற்றவாளியாக அறிவித்திருந்தார் மேலும், இந்த வழக்கில் அவருக்கு 6 ஆண்டுகள் சிறை தண்டனையையும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

அத்துடன், கிறிஸ்டினா பொது பதவிகளை வகிக்க வாழ்நாள் தடை விதிக்கப்படுவதாகவும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

கிறிஸ்டினா இந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்வார் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அர்ஜென்டினாவில் துணை ஜனாதிபதி ஒருவர் பதவியில் இருக்கும் போது ஊழல் வழக்கில் சிறை தண்டனை பெற்றது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.



# ஸ்பெய்னில் ரயில்கள் மோதல்; 155 பயணிகளுக்கு சிறு காயம்




மேட்ரிட், டிச.08

ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில் உள்ள மன்ரேசா ரெயில் நிலையத்தை நோக்கி நேற்று காலை பயணிகள் ரயில் ஒன்று சென்று கொண்டிருந்தது. அப்போது சற்றும் எதிர்பாராதவிதமாக ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றொரு பயணிகள் ரயிலுடன் இந்த ரயில் பயங்கரமாக மோதியுள்ளது.

இந்த விபத்தில் பெண்கள், சிறுவர்கள் உள்பட 155 பயணிகளுக்குக் காயம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. எனினும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படும் அளவுக்கு யாரும் பெரிய காயம் ஏற்படவில்லை என்றும், விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவராத நிலையில் இதுப்பற்றி விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# துருக்கி நாடாளுமன்றில் கைகலப்பு எம்.பி. ஒருவர் வைத்தியசாலையில்!

அங்காரா, டிச.08

துருக்கி நாட்டின் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பட்ஜெட் மீதான விவாதம் நடைபெற்றது. அப்போது அதிபர் தையிப் எர்டோகன் தலைமையிலான ஆளும் கட்சியின் உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் இந்த வாக்குவாதம் முற்றி கைகலப்பாக மாறியது.



ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களும் ஒருவரையொருவர் சரமாரியாக தாக்கிக் கொண்டனர். அப்போது ஆளும் ஏ.கே.பி. கட்சியைச் சேர்ந்த ஜபார் இசிக் என்கிற உறுப்பினர், குட் கட்சியின் உறுப்பினரான உசைன் ஓர்சின் முகத்தில் குத்தினார். இதில் 58 வயதான உசைன் நிலைகுலைந்து விழுந்தார். இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இதை தொடர்ந்து உசைன் ஓர்ஸ் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. நாடாளுமன்றத்தில் எம்.பிக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்படும் அளவுக்கு காயமடைந்த சம்பவம் துருக்கியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனியில் கஞ்சாப் பயன்பாட்டுக்கு அரசாங்கம் விரைவில் அனுமதி தரும்!



பேர்லின், டிச.08

உலகம் முழுவதும் பல நாடுகளில் கஞ்சாவை உபயோகிக்க மற்றும் விற்பனைக்குத் தடை விதித்துள்ள நிலையில் ஜேர்மனி தற்போது கஞ்சா பயன்பாட்டுக்கு அனுமதி வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்த திட்டம், ஜேர்மனி அரசால் கொண்டுவரப்படும் நிலையில், ஜேர்மனி உறுப்பினராக இருக்கும் ஐரோப்பியன் யூனியனிடம் ஒப்புதல் பெற வேண்டும் என்கின்ற நிலையில், அதற்கான நடவடிக்கைகளை ஜேர்மனி எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஞ்சாவிற்கு அனுமதி அளிக்கும் புதிய சட்டம் வரும் 2024 ம் ஆண்டுக்குள் கொண்டுவரப்படவுள்ளது. ஜேர்மனியில் ஆட்சியில் இருக்கும் கூட்டணி அரசு முந்தைய வருடம் இதற்கான வாக்குறுதியை அளித்திருந்தது. அதனைத் தொடர்ந்து தற்போது இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், 2024 க்குள் கஞ்சா பயன்பாட்டுக்கு அனுமதி வழங்க ஜேர்மனி திட்டமிட்டுள்ளதாகவும், வயது வந்தோர் அதிகபட்சம் 30 கிராம் வரை பயன்படுத்தும் வகையில் சட்டம் இருக்கும் எனவும் தகவல் வெளியாகி உள்ளது.

இது நடைமுறைக்கு வந்தால் கஞ்சாவுக்கு சட்டரீதியான அனுமதி வழங்கிய முதல் ஐரோப்பிய நாடு என்ற பெயரை ஜேர்மனி பெறும் எனத் தெரிகிறது. இந்த திட்டத்தை அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் கடுமையான எதிர்ப்பதாகத் தெரிவித்துள்ளன.

மேலும், சுவிட்சர்லாந்து மற்றும் இத்தாலி நாடுகளிலும் கஞ்சா சிறிய அளவில் பயன்பாட்டில் உள்ளது. மேலும் பெரும்பாலான நாடுகளில் கஞ்சா மருத்துவ பயன்களுக்காக உபயோகிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் தான் பெரும்பாலான மாகாணங்களில் கஞ்சா மருத்துவ பயனுக்காக உபயோகிக்கப்படுகிறது.

அதனைத்தொடர்ந்து, கனடா, உருகுவே, பிரான்ஸ் மற்றும் போர்ச்சுகல் ஆகிய நாடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசிய பொலிஸ் நிலையத்தினுள் தற்கொலைப்படை தாக்குதல் ஒருவர் பலி

ஜகார்தா, டிச.08

இந்தோனேசியாவின் மாகாணமான ஜாவா தீவி பண்டங்கில் உள்ள பண்டங்க் நகரில் அஸ்தனா அன்யர் என்ற பகுதியில் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை பொலிஸார் வழக்கமான அணிவகுப்பு பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது, உடல் முழுவதும் வெடிகுண்டை கட்டிக்கொண்டு ஒரு நபர் மோட்டார் சைக்கியில் பொலிஸ் நிலையத்திற்குள் நுழைந்தார்.

அங்கு அணிவகுப்பு பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிஸார் அருகே பைக்கில் சென்ற அந்த நபர் தான் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை திடீரென வெடிக்கச்செய்தார். இந்த தற்கொலைப்படை தாக்குதலில் ஒரு பொலிஸ் அதிகாரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும், 6 பொலிசார் உள்பட 7 பேர் படுகாயமடைந்தனர்.

தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்திய நபரும் உடல் சிதறி உயிரிழந்தார். இந்த

சம்பவம் தொடர்பாக பொலிசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். தற்கொலைப்படை தாக்குதல் நடத்தியவர் யார்? ஏதேனும் பயங்கரவாத அமைப்பு இந்தத் தாக்குதலின் பின்னணியில் உள்ளதா? -.என்பவை குறித்துப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.



# உலகில் சக்தி வாய்ந்த பெண்கள் பட்டியலில் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்..!!



நியூயார்க்,டிச.08

உலக அளவில் மிகவும் சக்தி வாய்ந்த நூறு பெண்கள் கொண்ட பட்டியலை ஆண்டுதோறும் அமெரிக்காவின் போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டு வருகிறது.

செல்வம், ஊடகம், தாக்கம் மற்றும் செல்வாக்கு ஆகிய 4 துறைகளில் இருந்து இந்த பட்டியல் தயாரிக் கப்படுகிறது.

இந்தஆண்டுக்கானபட்டியல்தற்போதுவெளியிடப்பட்டு உள்ள நிலையில், இதில் உலக அளவில் மிகவும் சக்தி வாய்ந்த பெண்ணாக ஐரோப்பிய கமின் தலைவர் ஊர்சுலா வாண்டர் லியன் முதலிடத்தை பிடித்து உள்ளார். உக்ரைன் போர் மற்றும் கொரோனா பெருந்தொற்று காலத்தில் அவரது செல்வாக்கு மிகுந்த தலைமையை அடிப்படையாக கொண்டு பட்டியலில் முதலிடம் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

இந்தப் பட்டியலில் ஐரோப்பிய மத்திய வங்கி தலைவர் கிறிஸ்டின் லக்ராட் 2 ஆம் இடத்தையும், அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் 3 ஆவது இடத்தையும் பிடித்து உள்ளனர். போர்ப்ஸ் பத்திரிகையின் இந்த பெருமை மிகுந்த பட்டியலில் முக்கியமாக, 39 தலைமை செயல் அதிகாரிகள், 10 நாடுகளின் தலைவர்கள், 11 கோடீசுவரர்கள் இடம் பிடித்து உள்ளனர்.

இந்நிலையில், இந்த பட்டியலில் இந்தியாவில் இருந்து 6 பேர் இடம்பிடித்து உள்ளனர். இதில் முக்கியமாக மத் திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் 36 ஆவது இடத்தை பிடித்து இருக்கிறார். கடந்த 3 ஆண்டுகளாக இந்த பட்டியலில் இடம்பிடித்து வரும் அவர், 4 ஆவது முறையாக இந்த ஆண்டும் தனது இடத்தை உறுதி செய்திருக்கிறார்.

இதைப்போல எச்.சி.எல். டெக் தலைவர் ரோஷினி நாடார் மல்கோத்ரா 53 ஆவது இடத்தையும், செபி தலைவர் மாதபி புரி பக் 54 ஆவது இடத்தையும், இந் திய ஸ்டீல் ஆணைய தலைவர் சோமா மண்டல் 67 ஆவது இடத்தையும் பிடித்து இருக்கின்றனர். கிரண் ஜும்தார்ஷா பயோகான் நிறுவன தலைவர் கிரண் மஜும்தார்ஷா 72 ஆவது இடத்தை பிடித்துள்ள நிலையில், நியாகா நிறுவனர்

பால்குனி நாயர் 89 ஆவது இடத்தையும் பிடித்து உள்ளார். இதில் ரோஷினி நாடார் மல்கோத்ரா, கிரண் மஜும்தார்ஷா, பால்குனி நாயர் ஆகியோர் கடந்த ஆண்டிலும் பட்டியலில் இடம் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குஜராத்தில் மீண்டும் பா.ஜ.க. ஆட்சி வாக்கெண்ணிக்கையில் முன்னிலை!

### இமாச்சலப் பிரதேசத்தில் காங்கிரஸ்



அகமதாபாத், டிச.08

சட்டசபை தேர்தல் நடைபெற்ற குஜராத், இமாச்சல பிரதேசத்தில் இன்று காலை வாக்கு எண்ணிக்கை தொடங்கிய நிலையில், ஆளும் பாரதிய ஜனதாக் கட்சி தொடர்ந்து ஆட்சியைத் தக்க வைத்திருப்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

குஜராத்தில் மொத்தமுள்ள 182?தொகுதிகளுக்கு இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற்றிருந்தது.

குஜராத்தில் ஆட்சி அமைக்க 92 தொகுதிகளை கைப்பற்ற வேண்டும் என்கின்ற நிலையில், இன்று காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. காலை முதலே பா.ஜ.க. பெரும்பான்மையான தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. அந்நத வகையில் காலை 10 மணி நிலவரப்படி பா.ஜ.க. 158 இடங்களில் முன்னிலை பெற்று வலுவான நிலையில் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

மேலும், காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சிகள் 26 இடங்களிலும், ஆம் ஆத்மி - 8 இடங்களிலும், மற்றவை- 2 இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றன.

எனவே குஜராத்தில் 7 ஆவதுமுறையாக பா.ஜ.க. ஆட்சியை பிடிக்கவுள்ளது. இந்நிலையில்,காலை 10 மணி நிலவரப்படியான இமாச்சலப் பிரதேச வாக்கெண்ணிக்கை நிலையில், காங்கிரஸ 40 இடங்களில் முன்னிலை பெற்று வலுவான நிலையில் உள்ளதாகவும், பா.ஜ.க. 25 இடங்களிலும், மற்றவை- 3 இடங்களி லும் முன்னிலை வகிக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## புயல் முன்னறிவித்தலை அடித்து தமிழகம் முழுத் தயார் நிலையில்!






சென்னை, டிச.08

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுப்பெற்றுள்ளது. இதன் காரணமாக, தமிழகம் முழுவதும் நாளை (9 ஆம் திகதி முதல் கன மழை பெய்யும் என்று சென்னை வானிலைஆய்வுமையம்எச்சரிக்கை?விடுத்துள்ளது. இந்த நிலையில் தமிழகம் முழுவதும் மீட்பு படையினரை தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், அனைத்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் தஞ்சை போன்ற 6 மாவட்டங்களுக்கு மாநில பேரிடர் மீட்பு குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதோடு பொலிஸ் துறையைச் சேர்ந்த நீச்சல் வீரர்கள், கடலோர பாதுகாப்பு குழும வீரர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த தன்னார்வலர்களும் படகுகளுடன் தயாராக இருக்க அறிவுறுத்தப்பட் டுள்ளனர் - என்று டி.ஜி.பி.சைலேந்திரபாபு தெரிவித்துள்ளார்.

## சென்னையில் 120 கடைகளுக்கு தொழில் வரி செலுத்தாததால் சீல்!




சென்னை, டிச.08

சென்னை மாநகராட்சியில் தொழில் வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. மாந கராட்சிக்குநிகழ்நிதிஆண்டின்இரண்டாவது அரையாண்டுவரை, தொழில்வரிகட்டாமல் இருப்பவாகள் பட்டியல் மாநகராட்சியின் இணையதளத்தில் அண்மையில் வெளியிடப்பட்டது.

இந்நிலையில், சென்னை அண்ணா சாலை அருகே ரிச்சி தெருவில் நீண்ட காலமாக தொழில்வரி செலுத்தாமல் நிலு வையில் வைத்திருந்த 90 கடைகளுக்கு மாநகராட்சிஅதிகாரிகள்சீல்வைத்துள்ளனர். அதைபோல பாரிமுனை நயினியப்பன் தெருவில் உள்ள 30 கடைகளுக்கு மாந கராட்சி அதிகாரிகள் சீல் வைத்தனர். நீண்டகாலமாகதொழில்வரிசெலுத்தாமல் நிலுவையில் வைத்திருந்ததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தொழில் வரி செலுத்தாமல், தொழில் உரிமம் பெறாமல், கடைகளை நடத்தி வந்த காரணத்தினால் சென்னை மாந கராட்சி முனிசிபல் சட்டம் 1919 பிரிவின்படி தொழில் உரிமம் மற்றும் தொழில் வரி இல்லாமல் நடத்தப்பட்ட கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

# ஒழுக்கக் கல்வியையும் சேர்த்து பாடசாலைகள் வழங்க வேண்டும்

## கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலர் வலியுறுத்து





(அபு அலா)

மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வியுடன், ஒழுக்கக் கல்வியையும் சேர்த்து வழங்குகின்ற போதுதான் அவர்களின் எதிர்காலம் சிறந்ததாக அமையும் என்று கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எ.மன்சூர் தெரிவித்தார்.

இலங்கை காப்போம் தொண்டு நிறுவனத்தின் அனுசரனை மற்றும் ஏற்பாட்டின் கீழ் திருகோணமலை அம்பாள் பாடசாலையில் கல்விகற்கும் தரம் 5 – 11 வரையாயான மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு காப்போம் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.ருக்ஸாலி ரொனிக்கா தலைமையில் பாடசாலையின் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எ.மன்சூர் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

கல்வியில் கிடைக்கப்பெறும் நன்மைகள், நல்ல மனிதர்களை உருவாக்குவது மட்டுமல்லாமல் அவர்களை நல்ல முறையில் செயலாற்றவும் உதவுகின்றது. மாணவர்கள் மனதில் சிறப்பான விழுமியக் கல்வியைப் போதிக்கின்றபோது, அம்மாணவர்கள் அறிவுத்திறனான மனப்பாங்கை வளர்த்துக்கொண்டு சிறந்த ஆளுமையையும் பெறுகின்றார்கள். அதுமாத்திரமன்றி நிறைந்த விழுமியக் கல்வியையும் பெற்று அதன் மூலம் இவ்வுலகை ஆளுகின்றவர்களாகவும் திகழ்வார்கள்.

ஒரு மாணவனுக்கு எந்தளவிற்கு அனுபவக் கல்வி அவசியமோ, அதேயளவிற்கு விழுமியக் கல்வி அவசியம் என்பதனை ஒவ்வொரு மாணவரும் உணர்ந்து கொள்ளவேண்டும். மாணவர்களிடையே விழுமியத்தை ஏற்படுத்துவது தொடர்பாக ஆசிரியர்கள் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். அப்போதுதான் மாணவர்களி டையே சிறந்த விழுமியக் கல்வியை போதிக்க முடியும்.

பாடசாலையில் நல்ல மாணவர்களை உருவாக்காவிட்டால், நாட்டில் நல்ல பிரஜைகள் இல்லமால் போய்விடும். அதனால் கலாச்சார சீரழிவு ஏற்பட்டு, சமூக ஒற்றுமை குழம்பி, சமூக நீதி இல்லாதுபோவதுடன், எதிர்கால சவாலுக்கு முகம் கொடுக்ககூடிய ஒரு சமூகத்தை உருவாக்க முடியாது போய்விடும்.

இன்றைய நவீன உலகிற்கு ஏற்ற வகையில் சிறந்த விழுமியத்துடன் கூடிய நற்பிரஜைகளை உருவாக்க வேண்டியது ஒவ்வொறு பெற்றோர், ஆசிரியர் சமூகம் போன்ற அனைவரது கடைமையாகும். அதற்கான பல உதவிகளை காப்போம் தொண்டு நிறுவனம் செய்து வருகின்றது. குறிப்பாக, வறிய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தவும், அவர்களுக்கு தேவையான பாடசாலை உபகரணங்கள் உள்ளிட்ட பல உதவிகளை வழங்கி வருகின்ற இந்நிறுவனம், இன்னுமின்னும் பல உதவிகளை வழங்கவும் தயாராக இருக்கின்றது. அந்நிறுவனத்தின் உதவிகளையும், வளங்களையும் பயன்படுத்தி மாணவச் செல்வங்களின் கல்வியுடன் ஒழுக்கக் கல்வியையும் மேம்படுத்த ஆசிரியர் சமூகம் முன்வரவேண்டும் என்றார்.

மாதுமை அம்பாள் வித்தியாலயத்தின் ஆசிரியர் திருமதி எஸ்.ஆர். ரோஸ்மேரி இலங்கை காப்போம் தொண்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரனிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக அப்பாடசாலையில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், பாடசாலையின் அதிபர் என்.இலங்கேஸ்வரன் உள்ளிட்ட பாடசாலையின் ஆசிரியர்கள், காப்போம் நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிறுவாக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

# மட்டக்களப்பு மாநகரத்தில் உலக சிறுவர் தின நிகழ்வு








உலக சிறுவர் தினத்தினை கொண்டாடும் வகையில் யுனிசெப் மற்றும் செரி நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று மட்டக்களப்பு சர்வோதய நிலையத்தில் இடம் பெற்றன.

பிரதி வருடமும் நவம்பர் மாதம் இருபதாம் திகதி உலக சிறுவர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டு வரும் நிலையில், இம்முறை மட்டக்களப்பு மாநகர சபை, ஏறாவூர் நகர சபை ஆகியவற்றின் ஒத்துழைப்புடனும், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களின் பங்களிப்புடனும் இச்சிறுவர் தின நிகழ்வுகள் இடம் பெற்றன. சிறுவர்களின் திறன்களையும், ஆற்றல்களையும் வெளிக்கொண்டுவரும்வகையிலும் அவர்களை உள ரீதியாக ஆற்றுப்படுத்தும் வகையிலும் என பல்வேறு நிகழ்வுகள் மட்டக்களப்பு வண்ணத்துப்பூச்சி பூங்கா பணிக் குழுவினரின் வழிகாட்டலில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் சிறுவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி. சரவணபவன், மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் நா. மதிவண்ணன், பிரதி ஆணையாளர். உ.சிவராசா, ஏறாவூர் நகர சபையின் செயலாளர் எம்.எச்.எம் ஹமீத், யுனிசெவ் நிறுவனத்தின் நிபுணத்துவ ஆலோசகர்களான க்யூரே யூ மற்றும் திருமதி தில்ருக்ஷி பிருந்தன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

அத்துடன் செரி நிறுவனத்தின் தேசிய திட்ட பணிப்பாளர் எபநேசர் தர்ன், திட்ட இணைப்பாளர்களான ரினோசா பிரசன்னா, மைக்கல் நிரோசன் மற்றும் சிறுவர் பதுகாப்பு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் விடே அம்சமாக சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாகவும், அவர்களுக்குள்ள சுதந்திரங்கள் மற்றும் தலைமைத்துவ பண்புகள் என்பன தொடர்பாக கலந்து கொண்ட சிறுவர்களுக்கு தெளிவுறுத்தப்பட்டதையும் குறிப்பிடத்தக்கது.

# விண்ணப்பம் கோரப்பட்டும் பரீட்சை நடைபெறவில்லை

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் சமூக சேவை உத்தியோகத்தருக்கான திறந்த போட்டிப்பரீட்சை விண்ணப்பம் கோரப்பட்டும் இது வரை பரீட்சை நடைபெறவில்லை என விண்ணப்பதாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் ஜனவரியில் போட்டிப் பரீட்சை தொடர்பில் விண்ணப்பம் கோரப்பட்ட நிலையில் தற்போது வரை – ஏறத்தாழ இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் – அந்த சமூக சேவை உத்தியோகத்தர் நியமனம் தொடர்பிலான எவ்வித அறிவித்தல்களுமோ போட்டிப் பரீட்சை நடாத்துவது தொடர்பான அறிவித்தல்களோ முன்வைக்கப்படவில்லை எனவும் பரீட்சார்த்திகள் தெரிவிக்கின்றனர்.

உரிய பரீட்சைக்காக கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுடன் விண்ணப்பித்து சுமார் ஒன்றரை வருடங்கள் கடந்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் நிலவும் வெற்றிடங்களை முன்வைத்து விண்ணப்பம் கோரப்பட்டாலும் பரீட்சை நடத்தப்படவில்லை .திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் திறந்த போட்டிப் பரீட்சைக்கே இவ்வாறு சமூக சேவை உத்தியோகத்தருக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்திற் கொண்டு குறித்த போட்டிப் பரீட்சையை நடாத்தி நியமனம் செய்யுமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஒருங்கிணைக்கப்பட்ட ஊடகச் செய்தியறை யாழ். பல்கலைக்கழகத்தில் திறந்துவைப்பு!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 'ஒருங்கிணைக்கப்பட்ட ஊடகச் செய்தியறை'கடந்த செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் சுவிஸ்லாந்து நாட்டைச் சேர்ந்த ஹெல்வெற்றாஸ் நிறுவனத்துக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இது அமைக்கப்பட்டது.

ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள் அச்சு ஊடகங்கள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணைய ஊடகங்களில் ஒருசேரப் பயிற்சி பெறுவதற்கான வசதிகளையும் உபகரணங்களையும் கொண்டதாக செய்தியறை அமைக்கப்பட்டுள்ளது.

ஹெல்வெற்றாஸ் நிறுவனம் இலங்கையின் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களில் முன்னெடுக்கும் சிந்தனை அரும்புகளங்களை உருவாக்கும் திட்டத்தின் ஓர் அங்கமாக இது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரின் ஜும்மா பள்ளி வீதியில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் ஊடகக் கலையகம் அமைந்திருக்கும் வளாகத்தில் நிறுவப்பட்டிருக்கும் இந்த ஒருங்கிணைக்கப்பட்ட ஊடகச் செய்தியறையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக ஹெல்வெற்றாஸ் சிந்தனை அரும்புகளத்தின் கருத்திட்ட முகாமையாளர் சந்துலா கும்புகஹே, ஊடகக் கற்கைகள் துறையின் தலைவர் பேராசிரியர் எஸ்.ரகுராம், இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்ற நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் மொகமட் அசாத் மற்றும் ஹெல்வெற்றாஸ் மற்றும் இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்ற அதிகாரிகள், ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் பல்செயற்பாட்டுக் களமானது பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் மாணவர்கள், துறைசார் நிபுணர்கள், ஊடகத் தொழில்வாண்மையாளர்கள், வளவாளர்கள் ஆகியோருக்கிடையே இணைந்து செயற்படல் மற்றும் கூட்டுழைப்பு என்பவற்றுக்கான இயலுமையை வழங்கக்கூடியதாக அமையும் என இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஹெல்வெற்றாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. வெளிப்பாட்டுச் சுதந்திரம், தகவல் உரிமைகளை ஊக்குவிப்பதற்கான இந்தக் கருத்திட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தால் நிதியீட்டம் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

## சுற்றுப் புறக் காற்று தரக் கண்காணிப்பு நிலையம் திறந்து யாழில் திறந்துவைப்பு!



யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நிறுவப்பட்ட சுற்றுப் புறக் காற்று தரக் கண்காணிப்பு நிலையம் நேற்று (புதன்கிழமை) காலை 9 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் இலங்கைக்கான உலக சுகாதார நிறுவனத்தின் நிதியுதவியுடன், சுற்றுப் புறக் காற்று தரக் கண் காணிப்பு நிலையம் யாழ்ப்பாணம் மாநகர சபையால் நிறுவப்பட்டது.

இதன் நினைவுக்கல்லை யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் திறந்து வைத்தமையுடன் காற்று தரக் கண் காணிப்பு நிலைய பொறிமுறையை சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்ஹ ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில் , மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் எஸ் பத்திரகே, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் பி.ஹேமந்த ஜெயசிங்கே, உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி வேர்கிங் மல்லவராச்சி, யாழ் மாவட்ட மேலதிக செயலாளர் ம.பிரதீபன், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் து.சுபோகரன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டிலீப் லியனகே,யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி,

யாழ்.மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தாய்ப்பால் புரைக்கேறி 3 மாத குழந்தை யாழில் உயிரிழப்பு!

தாய்ப்பால் புரைக்கேறி மூன்று மாத குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணம் மருதனார்மடம் பகுதியில் நேற்று (புதன்கிழமை) காலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கோகிலன் சாரோன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

## நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு நடை பயணம்!

### வவுனியாவில் நேற்று நடந்தது



வவுனியா மருத்துவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா வைத்தியசாலை முன்பாக நேற்று (புதன்கிழமை) காலை ஆரம்பித்த விழிப்புணர்வு நடை பயணம் கண்டி வீதி ஊடாக வவுனியா நகரை அடைந்து இரண்டாம் குறுக்குத்தெரு, கந்தசாமி கோவில் வீதி, பசார் வீதி, மில் வீதி, ஹொரவப்பொத்தானை வீதி என்பவற்றினூடாக மீண்டும் வவுனியா வைத்தியசாலையை வந்தடைந்தது.

தொற்றா நோய் ஆகிய நீரிழிவு நோய் தற்போது நாடளாவிய ரீதியில் அதிகரித்து வருகின்றது. வவுனியாவிலும் இந்த நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

மக்களது வாழ்க்கை முறையும், தவறான உணவுப் பழக்க வழக்கமுமே இந்த நோய் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் எனவும் இது தொடர்பில் ஆரம்பத்திலேயே விழிப்பாக இருக்க வேண்டும் என வலியுறுத்தி இந்த விழிப்புணர்வு நடைபயணம் இடம்பெற்றது.

இதில் மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் எம்.மகேந்திரன், மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதாரப் பிரிவினர், பொலிஸார், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், வர்த்த சமூகத்தினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் நேற்று சதுரங்க சுற்றுப் போட்டி!





சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டிலான சதுரங்க சுற்றுப்போட்டி நேற்று (புதன்கிழமை) மிகவும் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர் ஐ.மயூரனின் ஒழுங்கமைப்பில் கழகத் தலைவர் லயன் க.தினேஷ் தலைமையில் நடைபெற்ற இந்த சுற்றுப் போட்டியில் பிரதமவிருந்தினராக லயன்ஸ் கழக ஆளுநர்சபை தலைமைத்துவ இணைப்பாளர் லயன் ம.மயூரதனும், சிறப்பு விருந்தினராக கொக்குவில் நாமகள் வித்தி

விருந்தினராக யாழ்.வைத்தீஸ்வரக் கல்லூரி பதில் முதல்வர் எஸ்.யசோதரனும் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், திறந்த போட்டியாளர்கள் என 675 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் இந்த நிகழ்வில் பங்கு கொண்டனர். போட்டியில் பங்குபற்றிய 12 பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற போட்டியாளர்களுக்கு பதக்கங்கள், வெற்றிக் கேட யங்கள், சான்றிதழ்கள் என்பனவும், சமநிலை பெற்று புள்ளிகளின் அடிப்படை

ளுடன் வெற்றிக் கேடயங்களும் சகல போட்டியாளர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந்தப் போட்டியாளர்களுக்கான வெற்றிக் கேடயங்கள் சான்றிதழ்களை விருந்தினர்களுடன் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) முரளிதரனும், சமூகசேவையாளர் துரை பிரணவன் மற்றும் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் வழங்கி வைத்தனர். இந்தப் போட்டிகளை யாழ். அக்கடமி நிறுவனத்தினர் நெறிப்படுத்தினர். பிரதம தீர்ப்பாளர்களாக திருமதி

# தேசிய ரீதியிலான 500 மீற்றர் ஓட்டம் கிளிநொச்சி மாணவன் சாதனை!



தேசிய ரீதியிலான பாடசாலைகளுக் கிடையிலான 5000 மீற்றர் ஓட்டப்போட்டி யில் தேசிய ரீதியில் கிளிநொச்சி மாணவன் சாதனை படைத்துள்ளார்.

இந்த போட்டி கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் செவ் வாய்க்கிழமை காலை நடைபெற்றது.

இந்த போட்டியில் கிளி/ முழங்காவில் தேசிய பாடசாலையின் மாணவன் சுமன் கீரன் தோற்றி முதலாவது இடத்தைப் பெற்று, வரலாற்றில் முதன் முறையாகத் தேசிய மட்டத்தில் சாதனை படைத்துள் ளார்.

இந்த வீரன் அவரது வெற்றிக்கு உறு துணையாய் உழைத்த பயிற்றுவிப்பாளர் களுக்கும், அவரது பெற்றோர்களுக்கும் கற்ற பாடசாலைக்கும் பெருமையை தேடி கொடுத்துள்ளார்.

# சீனாவினால் வழங்கப்பட்டுள்ள 200 கோடி ரூபா பெறுமதியான மருந்துகள் நாட்டை வந்தடைவு!

சீனாவினால் வழங்கப்பட்ட 200 கோடி ரூபா பெறுமதியான, அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ பொருள்கள் நாட்டை வந்தடைந்தன.

சீனாவால் இலங்கை மக்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட இவை செவ்வாய்க்கிழமை கொழும்பு துறை முகத்தை வந்தடைந்தன.

மொத்தம் 24 கொள்கலன்களில் 255 மெற்றிக் தொன் எடையுடைய மருந்துகள் மற்றும் மருத்துவ பொருள்கள் இவ்வாறு நாட்டை வந்தடைந்துள்ளன என இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதல் இதுவரை இலங்கைக்கு 500 கோடி ரூபா பெறுமதி யான மருந்துகளை சீனா நன்கொடையாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தண்ணீர் வாளிக்குள் தவறி விழுந்த குழந்தை ஊர்காவற்துறையில் சாவு!

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை பகுதி யில் குளியலறை தண்ணீர் வாளிக்குள் விழுந்த ஒன்றரை வயது குழந்தை உயிரிழந்துள்ளது.

ஊர்காவற்துறை நாராந்தனை வடக்கை சேர்ந்த சசீபன் கெற்றியான் என்னும் ஒன்றரை வயது குழந்தையே உயிரிழந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெற்றோர் வழிப்பாட்டில் ஈடுபட்டிருந்த வேளை, விளையாடிக்கொண்டு இருந்துள்ளது.

திடீரென குழந்தையைக் காணததமை யால், பெற்றோர் தேடிய வேளை, குழந்தை குளியலறை தண்ணீர் வாளிக்குள் விழுந்த நிலையில் கண்டுள்ளனர்.

உடனே குழந்தையை மீட்டு, ஊர் காவற்துறை வைத்திய சாலையில் சேர்த்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச் சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு குழந்தை அனுப்பப்பட்டது.

போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த குழந்தை சிகிச்சை பலனின்றி செவ்வாய்க்கிழமை உயி ரிழந்துள்ளது.

## வடக்கு கிழக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களும் சேர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்திலும் பாரிய அளவிலான பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

– இவ்வாறு வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தின் வவுனியா மாவட்ட செய லாளர் திருமதி சிவானந்தன் ஜெனிதா ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, கல்லடி பாலத்தில் ஆரம்பிக்கப்படும் பேரணியானது காந்தி பூங்காவைச் சென்றடையும் எனவும் ,

வடக்கு மாகாணத்தில் ஐந்து மாவட் டங்களும் ஒன்றுசேர்ந்து முன்னெ டுக்கவுள்ள பேரணியானது வவுனியா மாவட்டத்தில் வவுனியா கந்தசுவாமி கோயில் முன்றலில் நாளைமறுதினம் காலை 10 மணியளவில் ஆரம் பிக்கப்பட்டு பஜார் வீதியூடாக இலுப்பையடிக்கு சென்று தொடர்ந்து ஏ -9 வீதியூடாக பழைய பஸ் நிலையத்தை வந்தடையும்.

மதகுருமார்கள், அரசியல் கைதி களின் உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பல்கலைகழக மாணவர்கள், இளைஞர் கள் – யுவதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கத்தினர், வர்த்தக சங்கத்தினர் , பொதுமக்கள் மற் றும் தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் அரசியல் தலைவர்கள், அரசியல் கட்சியினர் என எல்லோரையும் இந்தப் பேரணியில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் –என்றார்.

## அடுத்த வருடம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவிய லாளர் சந்திப்பு அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடை பெற்றது.

அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த ஐ.தே.கவின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான நவீன் தி ஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான கால எல்லையை அறிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித் ததாவது:-

உள்ளூராட்சி சபைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதி பதித் தேர்தல் என்பன ஒரே நாளில் நடத்தப்பட வேண்டும். அப்போது செலவீனத்தையும், வீண் விரயங்களையும் குறைக்க முடியும். தனித்தனியே தேர்தல்களை நடத்துவது இனியும் ஏற்புடையது அல்ல. இது தொடர்பில் ஜனாதிபதியிடம் யோசனை முன்வைக்கப்படும். 2023 மார்ச் மாதத் துக்குப் பின்னர் ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். 2023 ஆகஸ்ட் மாதமளவில் ஜனாதி பதித் தேர்தலை எதிர்பார்க்க முடியும்.

நாட்டு மக்கள் தேர்தலைக் கோரு கின்றனர். மக்கள் ஆணையுடன் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி பதவி விலகியுள்ளதால், ஜனாதிபதித் தேர் தலை நடத்துவதே ஏற்புடையதாக இருக்கும் –என்றார்.

## கூட்டணியில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாக வாக்களித்து, எதிரணி உறுப்பினர்கள் சிலர் அரசுடன் இணை யவுள்ளனர் எனவும், இந்தப் பட்டியலில் தமிழ் முற்போக்குக் கூட்டணியில் உறுப்பினர் ஒருவர் உள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையிலேயே தமது அணியில் இருந்து எவரும் கட்சி தாவமாட்டார் என கூட்டணியின் உள்ளகத் தகவல்கள் தெரிவித்தன.

## போதைப்பொருள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணைவேந்தர் பேராசிரியர் சி . ஸ்ரீசற்குணராஜாவும், சிறப்பு விருந்தி னராக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர். இ. சுரேந்திரகுமாரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில், தற்காலத்தில் போதை பொருள் பற்றிய நிலவரமும் அது தொடர்பான எமது நடவடிக்கைகளும் பற்றி வைத்தியர் க.குமரனும், மனித உரிமைகளும் போதைப்பொருளுக்கு அடிமையாதலும் பற்றி முன்னாள் ம னித உரிமைகள் ஆணையாளரும் சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதனும், போதைப்பொரு ளுக்கு அடிமையானவர்கள் தொடர்பான சட்டம் சார்ந்த ஓர் அறிமுகம் பற்றி குற்றவியல் நீதிமன்ற நீதிவான் அ.அ. ஆனந்தராஜாவும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் உளவியல் அம்சங்கள் பற்றி யாழ். போதனா வைத்தியசாலை மன நல வைத்திய நிபுணர் டி உமாகரனும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

தொலைபேசி இலக்கம்-
076 443 8622

